Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.792/**2019**
**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | வைரவன் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21nd day of September 2023

Signature of Witness.

21.09.2023

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது இடையங்குளம் சுபேதார் காளிமுத்து தெருவில் குடியிருந்து வருகிறேன் . நான் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி –1 இறந்த கோவிந்தன் எனது அப்பா. ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.06.2019 ம் தேதி காலை 6.30 மணிக்கு எதிரி TATA ACE, TN 84 F 8418 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தை வலது புறத்தில் சைக்கிள் கெட்டிக்கொண்டு திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையம் சென்று கொண்டிருந்தபோது அப்போது அங்கு எனது அப்பா கோவிந்தன் டீக்கடையில் டீ குடித்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது பின்னால் வந்த எதிரி TATA ACE –TN 84 F

8418 என்ற வண்டியால் எனது அப்பாவை இடித்துவிட்டார். முத்தம்மாள், மனோஜ்குமார், கோபி ஆகியோர் எனது அப்பாவை தூக்கி வைத்தார்கள் . எனது அப்பாவிற்கு வலது காலின் தொடைப்பக்கம் கால் முறிவு ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸில் கொண்டு சென்று திருவில்லிபுத்தூர் அரசு மருதுவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். இது சம்மந்தமாக எனது அப்பா மம்சாபுரம் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அந்த புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன்சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **(அந்த அறிவேன் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 19 நாட்கள் கழித்து எனது அப்பா இறந்துவிட்டார். மேற்படி விபத்தில் காலில் ஏற்பட்ட காயத்தினால் எனது அப்பா இறந்துவிட்டார். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.